பெண்ணை கண்டேன். திருமணம் செய்துவைக்க என்னோடு அந்த ஊருக்கு வாருங்கள் என்று அழைத்தபோதே. வேண்டாம் மகனே கர்த்தர் வெருக்கும் அப்படிப்பட்ட குடும்ப உறவு உனக்கு வேண்டாம். அந்நிய நுகத்திலே பினைக்கப்படகூடாது என்பது கர்த்தருடைய கட்டளை . விசுவாசிகள் விசுவாசிகளோடுதான் இணைக்கப்பட வேண்டும் என்று கூறி தடுத்திருக்கலாம். இயேசு கூறினார் ஒருவன் தன் மகனையோ - மகளையோ பெற்றோரையோ என்னைவிட அதிகம் நேசிப்பவன் எனக்கு பிரயோஜனமானவல்ல என்றார். அதாவது கடவுளைவிட யாரையும் அதிகமாக நெசிக்ககூடாது. கர்த்தருக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும்.

*மகனின் தவறான ஆசையை நிறைவேற்ற பெற்றோரும் இணங்கினார்கள். கர்த்தரின் ஆலோசனையை மகன்மேல் உள்ள பாசத்தால் அலட்சியபடுத்திவிட்டனர். இன்றைய பெற்றோர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும் மகனோ - மகளோ சாட்சியில்லாத லெகின்ஸ் போன்ற உடைகள் தலைமுடியை முள்ளம் பன்றியைபோல வளர்த்தல் இப்படி பல சாட்சியில்லாத ஆசைகளை நிறைவேற்றி மகனையும் இழந்து தவிக்கிறார்கள்.*

இவ்விதமாக **அவன் தீர்மானித்தபடியே திருமணம் நடக்கிறது.** நடந்தபிறகு ஒரு நாள் அவன் வெளியே போய்விட்டு திரும்ப வந்தபொழுது அந்த பெண்ணை அவளுடைய மாமனார் அவனுடைய தோழரின் **சிநேகிதனுக்கு** மறுமணம் செய்து கொடுத்து விடுகிறார். இப்பொழுது அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று சொன்னால். நீ அவளை வெறுத்தாய் என்று நாங்கள் எண்ணி அவளை வேறு ஒருவனுக்கு கொடுத்து விட்டோம் என்று சொல்லுகிறார்கள்.

அப்படியென்றால் இங்கு நாம் எதைப் பார்க்கிறோம்? **சிம்சோனுடைய வாழ்ககையிலே சிம்சோனுக்கும் அவனுடைய மனைவிக்கும் சரியான தொடர்பு இல்லை.** நான் கண்டேன். அவளைவிரும்புகிறேன். எனக்கு அவள் வேண்டும என்ற அவன் ஆசைப்பட்ட திருமணம். அது ஒருநாளில் நடந்த சம்பவம். பின்னாலே நடந்த காரியம் மற்றவர்கள் அவனைப் பார்த்து சொல்லுகிறார்களா. **நீ அவளை வெறுத்தாய்** என்று சொல்லி நாங்கள் எண்ணினோம். நினைத்திவிட்டோம் என்கிறார்கள். ஏன் அவ்விதமாக எண்ணினார்கள்? ஒரு காரணமும் இல்லாமல் அப்படி எண்ணியிருக்கமுடியாது.

பலகாலம் காலம் தன் மனைவியை காண வரவில்லை. அவன் இஷ்டப்பட்ட மனைவி கிடைத்ததும் சரீர சந்தோஷம் அனுபவித்தான். அதன் பின் சரீர சந்தோஷத்தில் சலிப்பு ஏற்பட்ட பின் மனைவியோடு தொடர்ப்பு கொள்வதை நிறுத்திவிட்டான் அதனால்தான் நீ அவளை வெறுத்துவிட்டாய் என்று எண்ணிவிட்டோம் என்றார்கள்.

